## வேலம்மாள் தொழில் நுட்ப கல்லூரியின்

# 6ம் ஆண்டு பட்டமளிப்பு விழா



▶ பட்டம் பெற்ற மாணவ, மாணவிகளுடன் வேலம்மாள் கல்விக்குழும தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம், கல்லூரி முதல்வர் சந்திரசேகர் உள்பட பலர் உள்ளனர்.

**பொன்னேரி, ஜூலை 3:** பொன்னேரி அடுத்த பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில் நுட்ப கல்லூரியின் 6ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் சந்திரசேகர் அனைவரையும் வரவேற்றார். வேலம்மாள் கல்விக் குழும தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் தலைமை தாங்கி பேசினார்.

இதில் சி.வி.ஆர்.டி.இ இயக்குநர் டாக்டர் சிவகுமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அண்ணா பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற 481 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். மேலும் பல்கலைக் கழக தரவரிசை பட்டியலில் இடம்பெற்ற 12 மாணவர்களுக்கு பட்டங்களுடன் தங்க காசுகளையும், ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார்.\அவர் பேசுகையில், 'பட்டம் பெற்ற அனைத்து மாணவர்களும் தற்கால கல்வியில் நாட்டம் செலுத்தி அதனை நன்கு கற்றுணர்ந்து தங்களுடைய நிலையினை உயர்த்தி, நாட்டு நலனையும் காக்க வேண்டும்" என்றார்.

காக்னிசன்ட் டெக்னாலஜி துணைத்தலைவர் முருகன் சுப்ரமணிய பிள்ளை கலந்து கொண்டு ''மாணவர்கள் பணிபுரிந்து கொண்டே தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் தொழில்நுட்ப உலகத்தோடு ஒன்றிணைந்து செயல் புரிய வேண்டும்" என்றார்.

\இந்த விழாவில் வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் முதன்மை செயல் அதிகாரி எம்.வி.எம்.வேல் முருகன், தாளாளர் எம்.வி.எம்.வேல் மோகன், இயக்குனர் எம்.வி.எம்.சசிகுமார் மற்றும் ஆலோசகர்கள் பேராசிரியர் கே.ரசாக், எம்.வாசு, கல்லூரியின் துணை முதல்வர் எஸ்.சௌந்தரராஜன் மற்றும் அனைத்து துறை தலைவர்களும் கலந்து கொண்டனர்.